1995 மார்ச் 20]

மாண்புமிகு புலவர் திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவரிட்மிருந்து தகுந்த கருத்துருக்கள் வரப்பெறின் அரசு ஆவன செய்யும்.

79—

திருநெல்வேலி தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

23307*—திரு. டி. வேலையா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, பாளையங்கோட்டை வட்டம், திம்மராஜபுரம் கிராமம், மஜரா படப்பக்குறிச்சியில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திம்மராஜபுரம் கிராமம், படப்பக்குறிச்சியில் 41 வீடற்ற ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்க அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(ஒன்பதாம் பட்டியல் (*))

1—

வால்பாறை தொகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் வாக்குச் சாவடிகள்.

வினா எண் *21993*—**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

***குறிப்பு:** இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.